மின்னிதழ்
# தேசியம்
THESIYAM தேசியம்
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 108 | 09.10.2023 (திங்கள்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 08 | ஊக்குவிப்பு : ரூ 30.00



## மயிலத்தமடு போராட்டத்தில் பதற்றம்:

# காட்டுமிராண்டித்தனமாக பெண்கள் மீது தாக்குதல்!

மயிலத்தமடுவிலிருந்து சிங்கள இன வாதிகளால் விரட்டப்பட்ட அப்பாவித் தமிழ்ப் பண்ணையாளர்களுக்கு நீதி கோரி போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களை பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாக தாக்கியுள்ளனர்.

மட்டக்களப்பு – மயிலத்தமடு, மாதவனை பகுதியில் உள்ள பண்ணையாளர்கள் உள்ளிட்ட பலர் செங்கலடி பகுதியில் பாரிய போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு – செங்கலடி மத்திய கல்லூரிக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வருகைத் தருவதனை முன்னிட்டு இவர்கள் ஜனாதிபதி பயணிக்கும் வீதியில் ஒன்று திரண்டு இந்த போராட்டத்தை நடத்தினர்.

இதன்போது போராட்டத்தில் கலந்து கொண்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாக தாக்கியுள்ளனர்.

மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பிரச்சனைக்கு தீர்வு கோரி பண்ணையாளர்கள் மட்டக்களப்பு

பக்கம் 05



# உரிமை கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்!

## - இரா. சாணக்கியன் திட்டவட்டம்

உரிமை இழந்தோம் காணிகளையும் இழந்தோம் உணர்வை இழக்கலாமா. தோல்வி நிலையென நினைத்தால் தன்மான தமிழன் வாழ்வை நினைக்கலாமா. எமது அறவழி போராட்டம் எமது மக்களுக்காக எந்த தடை வந்தாலும் உரிமை கிடைக்கும் வரை என்றும் தொடரும் என்று இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல்தரை அகிம்ம்சை வழி போராட்டத்தில் நேற்று பொலிஸாரின் கொடுபிடிகளுக்கு மத்தியில் பண்ணையாளர்களுடன் போராட்டக்களத்தில் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கலந்துகொண்டார்.

இதன்போது அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், மட்டக்களப்பு – மயிலத்தமடு, மாதவனை போராட்டம் இன்று 24ஆவது நாட்களாக தொடர்ந்து

பக்கம் 05

# கொழும்பில் இன்று மீண்டும் போராட்டம்

நீதிபதிகளினதும் நீதித்துறையினதும் கௌரவத்தையும், சுயாதீனத்தன்மையையும் பாதுகாக்குமாறு வலியுறுத்தி நாடளாவிய ரீதியிலுள்ள சட்டத்தரணிகள் இன்று கொழும்பு உயர்நீதிமன்றத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா உயிரச்சுறுத்தல் மற்றும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாகப் பதவி விலகுவதாகக் குறிப்பிட்டு கடந்த மாத இறுதியில் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு அவரது இராஜினாமா கடிதத்தை அனுப்பிவைத்திருந்தார். அத்துடன் அவர் நாட்டிலிருந்தும் வெளியேறியுள்ளார். இந்த சம்பவம் பல்வேறு சர்ச்சைகளையும் நீதித்துறை சுதந்திரம் தொடர்பில் கேள்விகளையும் தோற்றுவித்திருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து இன்று காலை 9.30 மணிக்கு

பக்கம் 05

# நாகப்பட்டினம் - காங்கேசன்துறை இடையே பயணிகள் கப்பல் சேவை நாளை ஆரம்பம்



நாகப்பட்டினம் – காங்கேசன்துறை இடையே நாளை பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்படும் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, சேவையில் ஈடுபடவுள்ள செரியாபாணி கப்பல், இன்றும் சோதனை ஓட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

25 கோடி இந்திய ரூபா செலவில் கொச்சினில் தயாரிக்கப்பட்ட செரியாபாணி கப்பல் மணித்தியாலத்திற்கு 36 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்கக்கூடியது.

14 ஊழியர்கள் மற்றும் 150 பயணிகளுடன் பயணிக்கும் வசதிகளை கொண்ட குறித்த கப்பலில், பயணிகளுக்கு தேவையான சிற்றுண்டி, தேநீர், குளிர்பானங்கள் போன்றவற்றை கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த சேவைக்காக தயாரிக்கப்பட்ட செரியாபாணி கப்பல் நேற்று முன்தினம் நாகை துறைமுகத்தை வந்தடைந்ததுடன், கப்பலுக்கு சிறப்பு வரவேற்பும் அளிக்கப்பட்டுள்ளது.

நாகை – இலங்கை கப்பலில் பயணம் மேற்கொள்வதற்கு ஒருவருக்கு ஒருவழி கட்டணமாக 27,000 ரூபாவும் இருவழி கட்டணமாக 53,500 ரூபாவும் அறவிடப்படவுள்ளது.

## புகைப்பிடித்த காரணத்தால் பணிப்புறக்கணிப்பு!




இலங்கையில் அண்மைக்காலமாக பல்வேறு தொழிற்சங்கங்களால் அறிவிக்கப்பட்ட தொடருந்து சேவைப்புறக்கணிப்புகள் பல மில்லியன் பயணிகளை சிரமங்களுக்கு உள்ளாக்கியுள்ளது.

இந்த நிலையில் சிகரட்டுக்காக 78 தொடருந்துகள் நிறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பலரும் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

அண்மையில் மாளிகாவத்தை முற்றத்தில் புகைப்பிடித்த போது உதவி தொடருந்து காவலர், பாதுகாவலருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதனையடுத்து சீருடையில் இல்லாத தொடருந்து காவலர், பாதுகாவலரால் தாக்கப்பட்டதாகக் கூறி வாக்குவாதம் தாக்குதலில் முடிந்தது. இதனையடுத்து அன்று மாலை திட்டமிட்ட பயணங்களை மேற்கொள்ளவிருந்த 78 தொடருந்துகள் சேவை புறக்கணிப்பில் ஈடுபட்டன.

சேவைப்புறக்கணிப்புக்கள் மற்றும் நெரிசலான தொடருந்துகளால் அதிருப்தியடைந்துள்ள தொடருந்து பயணிகள், தொழிற்சங்கங்கள் தங்கள் தனிப்பட்ட பிரச்சினைகள் மற்றும் திணைக்களத்தின் நிர்வாகக் குறைபாடுகளுக்காக சேவைகளில் இருந்து விலகியிருப்பதாக விமர்சித்துள்ளனர்.

இந்தநிலையில் பயணி ஒருவரின் கருத்தை ஊடகம் ஒன்று பிரசுரித்துள்ளது.

இன்று சிகரட்டுக்காக பணிப்புறக்கணிப்பை நடத்தியவர்கள், நாளை பீடிக்காகவும் பயணிகளை கஷ்டங்களுக்கு உள்ளாக்க தயங்கமாட்டார்கள் என்று அந்த பயணி குறிப்பிட்டுள்ளார்.

## தோணி கவிழ்ந்ததில் இருவர் உயிரிழப்பு!



மட்டக்களப்பு சீலாமுனை பகுதியில் இருந்து நாவலடி பிரதேசத்திற்கு மட்டு.வாவி ஊடாக 6 பேர் பயணித்த தோணி வாவியில் கவிழ்ந்ததில் நீரிழ் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த நிலையில் இருவர் சடலமாக மீட்கப்பட்டதுடன் நான்கு பேர் நீந்தி உயிர் தப்பியுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று மாலையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டு.சீலாமுனையைச் சேர்ந்த 19 வயதுடைய தவசீலன் கிருசாந்தன், மாமாங்கத்தைச் சேர்ந்த 18 வயதுடைய பிரபாகரன் பிருந்தயன் ஆகிய இருவருமே இதன்போது சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

மட்டு.தலைமையக பொலிஸ் பிரிவு சீலாமுனை மாமாங்கத்தை சேர்ந்த இளைஞர்கள் 6 பேர் டிக்ரொக் வீடியோ தரவேற்றம் செய்வதற்காக சம்பவதினமான நேற்று காலை 11 மணியளவில் சீலாமுனையில் இருந்து தோணியில் வாவியில் பிரயாணித்து நாவலடிக்கு சென்றுள்ளனர்.

அங்கு வீடியோ மற்றும் புகைப்படங்களை எடுத்துவிட்டு மீண்டும் சீலாமுனைக்கு தோணியில் பிரயாணித்தபோது தோணியின் கட்டப்பட குள்ளாதடி இரண்டாக உடைந்து தோணி வாவியில் கவிந்ததையடுத்து அனைவரும் நீரில் முழ்கியுள்ளனர்.

இதனையடுத்து 4 பேர் நீந்திகரையடைந்ததுடன் இருவர் காணாமல் போயிருந்ததையடுத்து கடற்றொழிலாளர்களின் உதவியுடன் அவர்களை தேடியுள்ளனர்.

இதன்போது நாவலடி பகுதியில் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டு மட்டு.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# டிப்போக்களுக்கு அருகில் உள்ள ஆபத்தான மரங்கள் அகற்றல்

## இலங்கை போக்குவரத்து சபை அறிவிப்பு

டிப்போ மற்றும் பஸ் தரிப்பிடங்களுக்கு அருகில் ஆபத்து ஏற்படும் வகையிலுள்ள மரங்களை அகற்றுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

அண்மையில் கொள்ளுப்பிட்டியில் பஸ் ஸொன்றின் மீது மரமொன்று முறிந்து வீழ்ந்த சம்பவத்தின் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதிகளில் பொலிஸார் மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவினரின் அறிவுறுத்தல்களை மீறி, பஸ் போக்குவரத்தில் ஈடுபட வேண்டாம் எனவும் அனைத்து டிப்போகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பல பகுதிகளில் மின்னல் தாக்கம் ஏற்படும்: வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

பல பகுதிகளில் பலத்த மின்னல் தாக்கம் ஏற்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் மழையுடன் பலத்த மின்னலுக்கான அதிக சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இடியுடன் கூடிய மழையின் போது அந்த பகுதிகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மின்னலினால் ஏற்படும் விபத்துக்களை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மக்களைக் கோருகிறது.

இதேவேளை, கிழக்கு, ஊவா, வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாதகமான வளிமண்டல நிலை காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு, ஊவா, மத்திய, வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் குருநாகல் மாவட்டத்திலும் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும். மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் புத்தளம் மாவட்டத்திலும் பல தடவைகள் மழை பெய்யலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையுடன் கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பல்வேறு ஆபத்துக்களை குறைத்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் நாட்டு மக்களை அறிவுறுத்தியுள்ளது.

# மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழப்பு: மூவர் காயம்



அம்பாறை – ஒலுவில் வெளிச்ச வீட்டிற்கு அருகில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிச்ச வீட்டிற்கு அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நால்வரே இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளனர்.

மின்னல் தாக்கியதில், ஒலுவில் இரண்டாம் பிரிவைச் சேர்ந்த 34 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# இஸ்ரேலில் சிக்கியுள்ள இலங்கையர்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் மனுஷ

இஸ்ரேலிலுள்ள இலங்கை தொழிலாளர்களின் பாதுகாப்புத் தொடர்பிலான விடயங்களை கண்டறிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் – பாலஸ்தீனத்திற்குமிடையிலான பாரிய மோதலினால் இரு தரப்புக்கும் இடையில் வன்முறைகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மோதல்களில் இதுவரையிலும் ஒரு இலங்கையர் மாத்திரமே சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்நிலையில் இஸ்ரேலில் சிக்கியுள்ள இலங்கையர்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இலங்கை தொழிலாளர்களை பாதுகாப் பதற்காக இஸ்ரேலின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவதானிக்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தயாராக இருப்பதாக மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இரு தரப்புக்கும் இடையில் வன்முறைகள் அதிகரித்துள்ளமை குறித்து வெளிவிவகார அமைச்சு கவலை தெரிவித்துள்ளது.


மேலும், குறித்த வன்முறை நடவடிக்கைகளை உடனே நிறுத்துமாறும் இலங்கை கூறியுள்ளது. பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்க அனைத்து தரப்பினரும் அதிகபட்ச கட்டுப்பாட்டை கடைபிடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த மோதல் பகுதிகளில் உள்ள இலங்கையர்களுடன் தொடர்ந்து ஒருங்கிணைந்து வருவதாக வெளியுறவு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த மோதல்களில் இதுவரையிலும் ஒரு இலங்கையர் மாத்திரமே சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.



# நாட்டை தாரைவார்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறார்கள்: தம்மரத்ன தேரர்



ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் நாட்டை தாரைவார்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாகவும் இதனை தடுக்க மக்களுடன் இணைந்து பணியாற்ற போவதாகவும் மிஹிந்தலை மகா விகாரையின் விகாராதிபதி வலவாஹெங்குனு தம்மரத்ன தேரர் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

இலங்கையின் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டால் உள்ளூர் மீன வர்கள் எவ்வாறு ஜீவனோபாயத்தைக் கொண்டு நடத்துவார்கள்?

இன்று முழு நாடுமே தாரைவார்க்கப்பட்டு விட்டதை போன்ற நிலையே உள்ளது. நிர்வாகிகள் வெளிநாடுகளுக்கு சென்று உடன்படிக்கைகளை செய்து வருகிறார்கள்.

வந்து ஒரு கிழமைக்கு பின்னரோ அல்லது ஒரு மாதத்திற்கு பின்னரோ நாட்டு வளங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், அடகு வைத்துள்ளதாகவும் அறிய முடிகிறது. இந்த ஆட்சியாளர்கள் நாட்டு மக்களின் அவயங்களை கூட விற்றுள்ளனர்.

நாட்டில் தற்போது முன்னெப்போதும் இல்லாத வகையில் மனித –யானை மோதல் அதிகரித்துள்ளது. இதற்கு முன்னர் இந்த நிலைமை காணப்படவில்லை. இருப்பினும் இன்று சடுதியாக அதிகரித்துள்ளது. காரணம் அரசாங்கத்தில் உள்ளவர்கள் வனப்பகுதிகளில் உள்ள இடங்களை அபகரித்து அங்கு கட்டிடங்களையும், ஹோட்டல்களையும், நட்சத்திர விடுதிகளையும் அமைத்துள்ளனர்.

இதன் காரணமாக யானைகள் வனப் பகுதிகளை விட்டு வெளியேறுகிறது. அத்தோடு அவற்றினால் மக்களின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. மின்வேலிகளும் முறையாக நிர்மாணிக்கப்படவில்லை.

எனவே நாடாளுமன்றத்தில் உள்ள 225 பேருக்கும் மக்கள் முன்னிலையில் வந்து உரையாட முடியாது. அதற்கான உரிமையோ அல்லது தகுதியோ அவர்களிடம் இல்லை என்பதை நாட்டு மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல்வாதிகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு முகங்களில், வெவ்வேறு கட்சிகளினூடாக வருகை தருவார்கள்.

அதற்கு நாட்டு மக்கள் ஒருபோதும் ஏமாறக்கூடாது. மக்களுடன் இணைந்து மோசமான ஆட்சியாளர்களிடத்திலிருந்து நாட்டை மீட்பதற்கு நாம் தொடர்ந்தும் செயற் படுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# நஸீர் அஹமட் தொடர்பான உயர் நீதிமன்ற தீர்ப்பு கட்சி தாவுவோருக்கு விடுத்துள்ள அபாய எச்சரிக்கை

## - முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

அமைச்சர் நஸீர் அஹமட்டின் கட்சி உறுப்புரிமை நீக்கம் சரியானது என உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வரலாற்று சரித்திரம் மிக்கதாகும் எனவும் இது அரசியல் இலாபங்களுக்காக கட்சி தாவும் தரப்பினருக்கு நீதிமன்றம் விடுத்துள்ள அபாய எச்சரிக்கை என்றும் எதிர்க்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முஜிபுர் ரஹ்மான் தெரிவித் துள்ளார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், குருந்தூர் மலை விவகாரத்தை முன்னிறுத்தி பாரிய பிரச்சினைகளை தோற்றுவிப்பதற்கு கடந்த காலங்களில் பல சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனை தொடர்ந்து மட்டக்களப்பு காணிப் பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை தோற்று விக்க முயற்சித்தனர். சமூக ஊடகங்களின் மூலமாகவும் இனங்களுக்கு இடையில் பிரச்சினையை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது நாட்டில் மீண்டும் இனவாதத்தை தோற்றுவிக்க சிலர் முயற்சித்து வருகின்றனரா என்ற சந்தேகம் எழுவதாக தோன்றுகின்றது. ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் 7, 8 மாதங்களே காணப்படும் நிலையில் இவ்வாறான பிரச்சினைகள் ஏன் தோற்றுவிக்கப்படுகிறது என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

மேலும் கட்சியின் தீர்மானங்களுக்கு மாற்றமாக செயற்பட்டமை தவறு என நஸீர் அஹமட் விவகாரத்தில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

இதன்காரணமாக அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை இல்லாமல் போகும். இடைக்




கிடையே கட்சி தாவும் தரப்பினருக்கு உயர் நீதிமன்றம் விடுத்துள்ள அபாய எச்சரிக்கையாக இதை நாம் கருதுகிறோம். குறிப்பாக கட்சியிலிருந்து பலர் அமைச்சு பதவிகளுக்காக சென்றார்கள்.

இவர்களுக்கு எதிராகவும் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. வரலாற்று சரித்திரம் மிக்க தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

விருப்பு வாக்கு வழங்குவதற்கு முன்னதாக கட்சிக்கே வாக்களிக்க வேண்டும். கட்சி எடுக்கும் தீர்மானங்களுக்கு கட்டுப்படவேண்டும்.

கட்டுப்பட முடியாவிட்டால் பதவியில் இருந்து விலக வேண்டும். கோட்டாபய ராஜபக் ஷவுக்கு எதிராக வாக்குகளை பெற்று விட்டு பின்னர் பாராளுமன்றத்தில் ராஜபக்ஷக்களுக்கு ஆதரவாக செயல்பட நாட்டு மக்கள் வாக்களிக்கவில்லை. நஸீர் அஹமட் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எதிர்காலத்தில் மேலும் பலருக்கு படிப்பினையாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

# தென் மாகாண பாடசாலைகளின் பரீட்சை பிற்போடப்பட்டது




தென் மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளின் இரண்டாம் தவணைப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தென் மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் இரண்டாம் தவணைப்பரீட்சை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது என தென் மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் குழு கூட்டத்தில் கலந்துகொண்ட போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த பாடசாலைகளுக்கான பரீட்சை திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தென் மாகாண ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.



### உரிமை கிடைக்கும் ..

முன்னெடுக்கப்பட்டு வந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் 24 நாட்கள் போராட்டம் பூர்த்தியாகும் நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டிருக்கின்றார்.

மட்டக்களப்பு – மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களது பிரச்சினை நியாயமானது. இதற்கொரு தீர்வு வேண்டும். இதன் காரணமாகத்தான் நாங்கள் பண்ணையாளர்களுடன் இணைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் மற்றும் சிவில் அமைப்புக்கள், ஏனைய அரசியல் கட்சிக்கள் மற்றும் பொது அமைப்புக்களுடன் இணைந்து இந்த போராட்டத்தினை மேற்கொள்வதற்கு தயார் நிலையில் இருந்தோம்.

ஆனால், இன்று காலையில் செங்கலடி பாடசாலையில் இருக்கும் மாணவர்களது கௌரவத்தை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்தோம்.

ரணில் விக்ரமசிங்க மட்டக்களப்பு செங்கலடி பாடசாலைக்கு ஒரு நிகழ்விற்காகவே விஜயம் செய்துள்ளார்.

அந்த நிகழ்வினை குழப்புவது எங்களது நோக்கம் அல்ல. அதிபர் கலந்து கொள்ளும் நிகழ்விற்கு எந்தவொரு இடையூறும் ஏற்படுத்தாமல் வீதியோரத்தில் நாங்கள் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தோம்.

ஆனால் பொலிஸார் அவர்களுடைய படையை களமிறக்கி, கண்ணீர்ப்புகை வாகனம் மற்றும் நீர்த்தாரைப் பிரயோகிக்கும் வாகனம் என்பவற்றை கொண்டுவந்து நீதிமன்றத்தின் தடை உத்தரவின்படி உங்களை இந்த இடத்தில் இருக்க விட மாட்டோம் என்று கூறினர்.

இதன் காரணமாகத்தான், எங்களுடைய மக்கள், நேற்றையதினம் அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் நிற்கலாம் என்றால் ஏன் நாங்கள் நிற்க முடியாது என தெரிவித்து எதிர்ப்பு வெளியிட்டனர்.

சர்வதேச நாடுகளுக்கு, இந்த நாட்டில் சிங்களவர்களுக்கு ஒரு நீதி தமிழர்களுக்கு ஒரு நீதி என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் நாங்கள் இன்று வீதிக்கு குறுக்கே வந்து நின்று எதிர்ப்பை வெளியிட்டு வருவதற்கு நாங்கள் தீர்மானித்தோம்.

உண்மையில் எங்களுடைய நோக்கம் அதிபரின் நிகழ்வை குழப்புவது அல்ல. ஆனால் நாங்கள் நினைத்திருந்தால் ஒரு ஐந்து பத்து நிமிடங்களுக்குள் அதனை செய்திருக்க முடியும்.

நாங்கள் கூட இந்த அழுத்தத்தை வெளியிடுவதற்கு காரணம், காவல்துறையினரை மீறி நாங்கள் செல்ல முற்பட்டால், அவர்கள் எங்களை அடிக்கிறார்கள், தொடக் கூடாத இடங்களை தொடுகின்றார்கள், கொலை முயற்சி செய்கின்றார்கள், காலால் எட்டி உதைக்கின்றார்கள்.

ஆனால் பிக்கு வந்தால் இவை அனைத்தும் வேறு மாதிரி நடக்கின்றது. பிக்கு விழுந்து விட்டார் தண்ணீர் கொடுங்கள் என்று கூறுகின்றார்கள். இதுதான் இலங்கை காவல்துறையினரின் நிலைமை.

அந்த பிக்கு ஒரு பெண் ஊடகவியலாளரைக் கூட அச்சுறுத்தும் நிலையில் அதனையும் வேடிக்கைப் பார்த்த காவல்துறையினர், இன்று எங்களது மக்களின் நியாயமான போராட்டத்தை நசுக்குவதற்கு ஆயிரக்கணக்கானோர் வந்திருக்கின்றார்கள்.

இந்தநிலையில், எங்களது மயிலத்தமடு மாதவனை மேய்ச்சற் தரை விவகாரத்தில் பண்ணையாளர்களுக்கு, மாவட்ட அரசாங்க அதிபராலோ, அல்லது மாவட்டத்தின் இராஜாங்க அமைச்சராலோ தீர்வினை வழங்க முடியாது.

ஏனென்றால் இராஜாங்க அமைச்சருக்கு அவர் சிறைக்குச் செல்லாமல் தன்னைக் காப்பாற்றிக் கொண்டிருப்பதுதான் வேலை. எனவேதான் நாங்கள் எமக்கு நீதி கிடைக்கு வரை இந்த போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

### மயிலத்தமடு ...

மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்துடன் இணைந்து மட்டக்களப்பு செங்கல்லடியில் போராட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தனர்.

ஜனாதிபதி இருநாள் பயணமாக நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்தார். அந்த நிலையில் நேற்று பெருமளவான மக்களின் பங்களிப்புடன் போராட்டம் இடம்பெற்ற போது, பொலிஸாருக்கும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

### கொழும்பில் இன்று...

கொழும்பு உயர்நீதிமன்றத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளனர். நாட்டின் நீதிமன்ற சுயாதீனத்துவத்தை உறுதிப்படுத்துமாறும், நீதிபதிகள் மற்றும் நீதிக்கட்டமைப்பின் கௌரவத்தைப் பாதுகாக்குமாறும், முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜாவுக்கான நீதியை நிலைநாட்டுமாறும் வலியுறுத்தி முன்னெடுக்கப்படவுள்ள இந்த போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு நாடளாவிய ரீதியிலுள்ள சட்டத்தரணிகளுக்கும் சட்டத்தரணிகள் அல்லாதோருக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த போராட்டத்தில் அனைவரினதும் பங்கேற்பானது, நீதிக்கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாப்பதில் அனைவரும் ஒன்றிணைந்து நிற்பதைக் காண்பிக்கும் என்று முல்லைத்தீவு சட்டத்தணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை இலங்கை ஏற்கிறது

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை இலங்கை ஏற்கவுள்ள அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டம் அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதியன்று கொழும்பில் இலங்கை நடாத்தவுள்ள 23ஆவது இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்திற்காக இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் அதன் உறுப்பு நாடுகளின் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளனர்.

அவுஸ்ரேலிய உதவி வெளியுறவு அமைச்சர் டிம் வொட்ஸ், பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஏ.கே. அப்துல் மொமன், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் உள்ளிட்ட பல நாடுகளின் பிரதிநிதிகள் கொழும்பில் நடைபெறும் அமைச்சர்கள் குழு கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜப்பான் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் மசாஹிரோ கொமுரா, கொரியா வெளியுறவு அமைச்சின் அரசியல் விவகாரங்கள் துணை அமைச்சர் சுங் பியுங்-வோன், ஐக்கிய இராச்சியத்தின் இந்தோ-பசிபிக் அமைச்சர் அன்னே மேரி ட்ரெவெலியன், ஆகியோரும் இந்த கூட்டத்தில் இணையவுள்ளனர்.

அமைச்சர்கள் குழு என்பது இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் தீர்மானம் மேற்கொள்ளும் மிக உயர்ந்த அமைப்பாகும். தற்போதைய தலைவரான பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் தலைமைப் பதவியை வழங்கும்போது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி சபைக்கு தலைமை தாங்குவார்.

இந்தக் கூட்டத்திற்கு முன்னதாக, வெளியுறவு செயலாளர் அருணி விஜேவர்தன தலைமையில் இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவின் 25ஆவது கூட்டம் (ஒக்டோபர் 9 முதல்10வரை) நடைபெறும்.

23ஆவது அமைச்சர்கள் கூட்டத்தில் 2023 முதல் 2025 வரையான காலப்பகுதிக்கான இந்து சமுத்திர எல்லை நாடுகள் சங்கத்தின் தலைமைப் பதவியை இலங்கை ஏற்கவுள்ளது.

வர்த்தகம் மற்றும் முதலீடு, கடல்சார் காவல் மற்றும் பாதுகாப்பு, மீன்பிடி முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம் மற்றும் பசுமைப் பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களில், சங்கத்தால் அடையாளம் காணப்பட்ட ஆறு முன்னுரிமைப் பகுதிகளில் ஒத்துழைப்பதற்கான வழிகள் குறித்து அமைச்சர்கள் ஆலோசிக்கவுள்ளனர்.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி சல்மான் அல் ஃபரிசி மற்றும் மொரிஷியஸில் உள்ள இந்து சமுத்திர எல்லை சங்க செயலகத்தின் பணிப்பாளர்களும் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

# மாத்தறை கிரீட் உப மின் நிலையம் மூடப்படும்

பாதுகாப்பு நடவடிக்கையாக மாத்தறை கிரீட் உப மின் நிலையத்தை தேவை யேற்படின் மூடுவதற்கு திட்டமிட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பலத்த மழை காரணமாக நீர்மட்டம் உயர்வடைவதால் மாத்தறை மின்சார சபையின் கிரீட் உப மின் நிலையம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுவதாக குறிப்பிட்டார்.

தெனியாய மற்றும் பெலியத்த உப மின் நிலையங்களின் ஊடாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்க, மின்சார சபை திட்டமிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

உப நிலையங்கள் மூடப்பட்டதன் பின்னர் அங்கு பணிபுரியும் மின்சார சபை ஊழியர்களை பாதுகாப்பாக அழைத்து வருவதற்காக கடற்படையினரால் படகுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.



## நிகழ்நிலைக்காப்புச் சட்டமூலம்:

# சகல தரப்பினருடனும் பரந்துபட்ட பேச்சுக்கள்



நிகழ்நிலைக்காப்புச் சட்டமூலம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் தீவிர கரிசனைகளை வெளியிட்டுவருகின்றனர்.

இந்த நிலையில், அச்சட்டமூலம் தொடர்பில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் பரந்துபட்ட பேச்சுக்களை முன்னெடுப்பதற்கும் அவசியமான திருத்தங்களை மேற்கொள்வதற்கும் தயாராக இருக்கிறோம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஊடகத்துறைசார் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி இந்த சட்டமூலம் தொடர்பில் 3 விசேட தரப்பினருடன் வெகுவிரைவில் பேச்சுக்களை முன்னெடுக்கவிருக்கும் அமைச்சர் டிரான் அலஸ், அதனைத்தொடர்ந்து எதிர்வரும் 2 – 3 மாதங்களுக்குள் திருத்தங்களுடன்கூடிய நிகழ்நிலைக்காப்புச் சட்டமூலத்தைப் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளார்.

உத்தேச நிகழ்நிலைக்காப்புச் சட்டமூலமானது பல்வேறு எதிர்ப்புக்களுக்கும் விமர்சனங்களுக்கும் மத்தியில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால் கடந்த செவ்வாய்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதனையடுத்து அந்தச் சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் 4 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், இதுபற்றி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

நிகழ்நிலைக்காப்புச் சட்டமூலம் தற்போதைய வடிவத்திலேயே நிறைவேற்றப்படும் பட்சத்தில் அதன்விளைவாக கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் வெகுவாகப் பாதிக்கப்படக்கூடுமென பல்வேறு தரப்பினரும் கரிசனைகளை வெளிப்படுத்திவருகின்றனர்.

இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை ஊடகத்துறையுடன் தொடர்புடைய சிவில் சமூகப்பிரதிநிதிகளை சந்தித்த அமைச்சர் டிரான் அலஸ், இந்த சட்டமூலம் குறித்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பில் பங்கேற்ற ஊடகத்துறைசார் பிரதிநிதிகள், நிகழ்நிலைக்காப்புச் சட்டமூலமானது சம்பந்தப்பட்ட தரப்பினருடனான விரிவானதும் செயற்திறன்மிக்கதுமான கலந்துரையாடல்களின்றிக் கொண்டுவரப்பட்டிருப்பது குறித்தும், அச்சட்டமூலத்தில் 'குற்றமாக' கூறப்பட்டிருக்கும் கருத்துக்களுக்கான பரந்துபட்ட வரைவிலக்கணம் மற்றும் அதன் தெளிவற்ற தன்மை குறித்தும் தமது கரிசனைகளை வெளிப்படுத்தினர்.

அதுமாத்திரமன்றி இந்த சட்டமூலத்தை எவ்வித திருத்தங்களுமின்றி தற்போதைய வடிவத்திலேயே நிறைவேற்றுவதன் மூலம் ஊடக சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் ஆகியவற்றின் மீது ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பாகவும் அவர்கள் அமைச்சரிடம் விரிவாக எடுத்துரைத்துள்ளனர்.

அத்தோடு சர்வதேச நாணய நிதியத் தின் கடனுதவி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தின் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை ஆகியவற்றுக்காகக் காத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறானதொரு சர்ச்சைக்குரிய சட்டமூலத்தை அவசரமாகக் கொண்டுவந்து நிறைவேற்றவேண்டியதன் அவசியம் என்ன என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

இந்த கரிசனைகளை செவிமடுத்த அமைச்சர் டிரான் அலஸ், இந்த நிகழ்நிலைக்காப்புச் சட்டமூலம் அவசரமாகத் தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், இதுகுறித்து 2016 ஆம் ஆண்டு முதல் ஆலோசிக்கப்பட்டுவருகிறது எனவும் விளக்கமளித்தார்.

அதேபோன்று சிறுவர் துஷ்பிரயோகங்கள், பெண்களுக்கு எதிரான அத்துமீறல்கள் மற்றும் சட்டவிரோத பாலியல் நடத்தைகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருகுறைத்து என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்திய மீனவர்களுக்கு இலங்கை கடற்பரப்பிற்குள் மீன்பிடிப்பதற்கான அனுமதி தொடர்பில் பரிசீலனை

இந்திய மீனவர்களுக்கு இலங்கை கடற்பரப்பிற்குள் மீன் பிடிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது எனவும் இந்த விடயம் தொடர்பில் இருதரப்பு மீனவர்களும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி ஒன்றிலேயே இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீன்கள் எல்லாப் பக்கங்களும் செல்லக்கூடியன. மீனவர்கள் மீன்களை பின்தொடர்ந்து சென்று பிடிக்கிறார்கள். பாக்குநீரினை ஒரு சிறிய பகுதியாகும். இதுப்பற்றி விரிந்த பேச்சு வார்த்தைகள் நடத்துகின்றோம். தற்போது உடன்பாடுகளும் எட்டப்பட்டுள்ளன. கைதான இந்திய மீனவர்கள் சிலர் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை பிடிக்கப்படும் படகுகளும் விடுவிக்கப்படுகின்றன. வட பகுதியில் சிறந்த மீன்பிடி வளம் உள்ள பகுதியாகும்.

இந்திய மீனவர்களுக்கு அனுமதி பத்திரம் வழங்குவது பற்றி பேச்சுக்களில் ஈடுபட்டு வருகிறோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டில்லிக்கு விஜயம் செய்திருந்த போதும் பேசப்பட்டது.

இந்த திட்டத்தை பரிசீலிக்க தயாராகவே இருக்கிறோம். இருப்பினும் இந்த இரண்டு தரப்பு மீனவர்களின் ஒத்துழைப்புகளும் அவசியமாக உள்ளது.

ஏனென்றால் இது அரசு தரப்பு சார்ந்த விடயம் மட்டுமல்ல. பிரதானமாக மீனவர்கள் சம்பந்தப்பட்டது. இந்த விவகாரத்தில் இருதரப்பு புரிந்துணர்வு கட்டாயம் இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.



# பெரும் போகத்துக்கான யூரியா உரத்தை இன்று முதல் விநியோகிக்க நடவடிக்கை

எதிர்வரும் பெரும் போகத்துக்காக 21 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை இன்று முதல் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள என்றும் இது தொடர்பில் அரச உர நிறுவனங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சிலோன் உரக் கம்பனி மற்றும் கொழும்பு வர்த்தக உரக்கம்பனி ஆகிய நிறுவனங்களால் விநியோகப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உரத்தை கமநல சேவை நிலையங்களில் இருந்து கொள்வனவு செய்ய முடியும் எனவும் 50 கிலோ கிராம் யூரியா உர மூடை 9 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இரசாயன உரம் அல்லது சேதன உரங்களை கொள்வனவு செய்வதற்கு ஹெக்டேருக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நெற்பயிர்ச்செய்கை, காய்கறிகள் மற்றும் ஏனைய பயிர்களுக்கும் யூரியா மற்றும் ஏனைய உரங்களை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்குமாறு அரச உர நிறுவனங்களுக்கு விவசாய அமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ளதாக தெரியவருகிறது.



# கிழக்கு மாகாணத்தை முழுமையாக அபிவிருத்தி செய்ய வேலைத்திட்டம்

## - ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கிழக்கு மாகாணத்தை அடுத்த பத்து ஆண்டுகளில் முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு - செங்கலடி மத்திய கல்லூரியின் 149 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் நேற்று பிரதம அதிதியாகக் கலந்துகொண்டபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்

இந்தியாவுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கமைவாக திருகோணமலை மாவட்டம் அபிவிருத்தி செய்யப்படும். அதேபோன்று மகாவெளி ஏ மற்றும் பி பிரிவின் கீழ் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

ஜனாதிபதி இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், முன்னாள் அமைச்சர் கேடபிள்யு. தேவநாயகம், ஜே.ஆர். ஜயவர்தன மற்றும் நானும் சமகாலத்தில் அமைச்சரவையில் இருந்தவர்கள். அக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தை மகாவெளி திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்வதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் போர் காரணமாக தடைப்பட்டது. இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தை விரைவாக அபிவிருத்தி செய்வதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் விவசாயம், கடல் தொழில் மற்றும் உல்லாசப்பணத்துறை ஆகிய அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. விவசாயத்துறையில் நவீனத்துவம் உட்புகுத்தப்படும்.

பண்ணையாளர்களும் தினமும் 10 தொடக்கம் 12 லீற்றர் பால் கறக்கும் கறவைப் பசுக்கள் வழங்கப்படும். அதேபோன்று இலட்சக்கணக்கான உல்லசப்பயணிகள் வரக்கூடிய பிரதேசமாக கிழக்கு மாகாணம் மாற்றப்படும்.

செங்கலடி மத்திய கல்லூரி பல துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளது. இங்கு சிலவகையான நடனங்கள் அரங்கேற்றப்பட்டபோதிலும் மேற்கத்தேய நடனம் இருக்கவில்லை நான் அடுத்த முறை இங்கு வரும்போது மேற்கத்தேய நடனமும் அரங்கேற்றப்படவேண்டுமென எதிர்பார்க்கிறேன். இப்பாடசாலைக்கு நான் தொழில் நுட்ப கூடமொன்றை வழங்கவுள்ளேன்" என்றார்.

பாடசாலை அதிபர் தே.குகதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ,இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் துறைசார் அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

வார இதழ்
தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தේසියම්
தமிழ் பேசும் மக்களின் தேசிய பத்திரிகை!
தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!
SCAN ME
No. 27, Kannathiddy Road, Jaffna. | Tel : 021 222 7557 | Whatsapp : +94 76 567 3339 | E-mail : thesiyamnews@gmail.com


அ.கிருபாகரன்
- அதிபர் -
அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...
கிருபா லேணர்ஸ்
කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS
குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தவணைமுறையில் கட்டணங்கள்.
இரவிலும் வாகனப் பயிற்சிகள்.
We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.
தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292
சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777